# புதுச்சேரி அரசு

# குடிமக்கள் சாசனம்

## மாவட்டத் தொழில் மையம்
## தொழிற்பேட்டை, தட்டாஞ்சாவடி
## புதுச்சேரி – 605 009

இணையதளம் : https://dic.py.gov.in

மே 2024

# முகவுரை

மாவட்டத் தொழில் மையம் 1978 ஆம் ஆண்டு ஜுலை 1ஆம் நாள் நிறுவப்பட்டது. இது மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு, மிகப்பெரிய அளவில் சேவை செய்வதுடன், தொழில் முனைவோர்கள், படித்து வேலையில்லா இளைஞர்கள் மற்றும் கைவினை கலைஞர்கள் சிறுதொழில் தொடங்க உறுதுணையாக செயல்படுகிறது.

மாவட்டத் தொழில் மையத்தின் தலைமையகம் புதுச்சேரியிலும், கிளை-அலுவலகங்கள் காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதியிலும் செயல்படுகிறது. இது அந்தந்த பகுதியில் புதியதாக தொழில் முனைவோர்களின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது. மேலும் படித்து வேலையில்லா இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி, தொழிற் கூடங்களில் பயிற்சி, கைவினை தொழில் பயிற்சி மற்றும் தென்னைநார் தொழில் பயிற்சிகள் தருவதன் மூலம் வேலைவாய்ப்பினை பெற உதவி புரிகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் MUPSES, PMEGP, மற்றும் PM விஸ்வகர்மா திட்டங்கள் மூலம் சுயதொழில் தொடங்க கடன் உதவியளிக்கின்றது. மேலும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற்கூடங்களில் உற்பத்தியாகும் பொருட்களை சந்தை படுத்த ஒவ்வொரு வருடமும் புதுடெல்லியில் நடைபெறும் கண்காட்சி/பன்னாட்டு வர்த்தக கண்காட்சியில் கலந்துகொண்டு விற்பனை செய்ய உதவி புரிகின்றது.

மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளர் அவர்கள் இத்துறையின் குடிமக்கள் சாசனத்தை உருவாக்க ஒரு குழு அமைத்துள்ளார். இக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களைப் பற்றிய விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

குடிமக்கள் சாசனம், துறையின் திட்டங்களில் கொண்டுவரப்படும் மாற்றங்களுக்கும் பங்குதாரர்களின் கருத்துக்கேற்ப மாற்றி அமைக்கப்படுகின்றது.

******

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| I. | குறிக்கோள் | 1 |
| II. | திட்டங்கள் | 1 |
| III. | தொழிற்கூடங்களின் வளர்ச்சி | 3 |
| IV. | கைவினைத் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம் | 6 |
| V. | தென்னைநார் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம் | 11 |
| VI. | சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம் | 15 |
| VII. | கதர் மற்றும் கிராம தொழில் வாரிய வளர்ச்சி திட்டம் | 18 |
| VIII. | வேலையில்லா நபர்கள் சுயதொழில் தொடங்குவதற்கான ஊக்குவிக்கும் திட்டம் | 19 |
| IX. | பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் | 20 |
| X. | பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டம் | 22 |
| XI. | வழிகாட்டல் மற்றும் உதவிபுரிதல் | 25 |
| XII. | சேவை பெறுநர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவன | 25 |
| XIII. | குறைதீர்த்தல் | 25 |
| XIV. | குறைதீர்த்தலின் விரிவாக்கம் | 25 |
| XV. | பங்குதாரர்களின் பட்டியல் | 26 |
| XVI. | பொறுப்பு அலுவலகங்கள் மற்றும் துணை அலுவலகங்களின் முகவரிகள் | 26 |
| XVII. | குடிமக்கள் சாசனத்தை மறு ஆய்வு செய்து புதுப்பிக்கப்படும் மாதம் மற்றும் வருடம் | 27 |
| XVIII. | முடிவுரை | 27 |
| XIX. | சுருக்கங்களின் விளக்கம் | 27 |
| XX. | குடிமக்கள் சாசனத்தை மறு ஆய்வு செய்யும் பணிக்குழு | 28 |
| XXI. | மாவட்டத் தொழில் மையம் - நிர்வாக அமைப்பின் விளக்கப்படம் | 29 |

# I. குறிக்கோள்

தொழில் முனைவோர்/ வேலையில்லாத இளைஞர்கள் / கைவினைக் கலைஞர்கள் சுயதொழில் தொடங்க உறுதுணையாக இருத்தல் மற்றும் அவர்களுக்கு சேவை செய்வது மாவட்டத் தொழில் மையத்தின் குறிக்கோளாகும்.

# II. திட்டங்கள்

**தொழிற்கூட வளர்ச்சியில்:-**

❖ புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தொழில் நிறுவனங்களை வளர்த்தல்

❖ தொழிற்சாலைகளுக்குத் தேவையான மனித வளத்தை மேம்படுத்த இளைஞர்களுக்கு தொழிற்கூட பயிற்சி, மேம்பட்ட/ உயர்தொழில்நுட்ப பயிற்சி, தொழிற்பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேலாண்மை பயிற்சிகள் அளிப்பது.

❖ தொழிற் துறையில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் நவீன உத்திகளை தொழிற்சாலை/நிறுவனர்கள் மற்றும் தொழில் முனைவோர் அறிந்து கொள்ளும் வகையில் கருத்தரங்கம், கருத்தாய்வு பயிற்சிகள் அளிப்பது.

**கைவினைத் தொழில் வளர்ச்சியில்:**

❖ அழியும் நிலையில் உள்ள கைவினைத் தொழில்களை புதுப்பிக்க.

❖ கைவினை தொழிற்பயிற்சியளிப்பதன் மூலம் கைவினைத் தொழில் செய்வோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது.

❖ புதுப்புது கைவினைத் தொழில்களையும், உத்திகளையும் நமது யூனியன் பிரதேசத்தில் புகுத்த.

❖ கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க.

**தென்னைநார் தொழில் வளர்ச்சியில் :**

❖ தென்னைநார் தொழில் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை வளர்க்க

**சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம்:**

- ❖ புதுச்சேரி மாநிலத்தில் உற்பத்தியாகும் அனைத்து பொருட்களை விளம்பரப்படுத்தவும், விற்பனை செய்யவும், கண்காட்சியில் பங்குபெற தேவையான வசதிகளை அமைத்துக் கொடுத்தல்.

**கதர் மற்றும் கிராமிய தொழில் வளர்ச்சியில் :**

- ❖ கதர் மற்றும் கிராமிய தொழில்களை வளர்க்க தேவைப்படும் அரசு மானியத்தை வாரியத்தின் மூலம் வழங்குதல்.

**படித்த வேலை கிடைக்காத நபர்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கான ஊக்குவிக்கும் திட்டம் (மாநில அரசு)**

- ❖ படித்து வேலை கிடைக்காத நபர்கள் சுயதொழில் தொடங்க வங்கியின் மூலம் ரூபாய் 2 இலட்சம் வரை கடன் பெற்றுத்தருதல்.

**பிரதம மந்திரியின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் (நடுவண் அரசு திட்டம்):**

- ❖ பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் (நடுவண் அரசு திட்டம்) படித்து வேலை கிடைக்காத நபர்களுக்கு சுயதொழில் தொடங்க வங்கிகள் மூலம் ரூபாய் 50 இலட்சம் வரை தொழில் மற்றும் சேவை பிரிவுகளில் கடன் வழங்க ஏற்பாடு செய்தல்.

**பிரதம மந்திரி விஸ்வகர்மா (நடுவண் அரசு திட்டம்)**

- ❖ விஸ்வகர்மா கலைஞர்களுக்கு அவர்களுடைய வர்த்தகத் தொழிலை மேம்படுத்துவதற்கு ஆதரவு வழங்குதல்.

- ❖ விஸ்வகர்மா கலைஞர்களுடைய தயாரிப்புகளின் தரம் மற்றும் அவர்களின் சேவையை மேம்படுத்துவது மற்றும் அவர்களுடைய தயாரிப்புகளை உள்நாடு மற்றும் உலகளாவிய அளவில் இணைப்பது.

## III. தொழிற்கூடங்களின் வளர்ச்சி

**பயிற்சித் திட்டங்கள்:**

**1. தொழிற்கூடங்களில் பயிற்சி (தொழில்கள் மற்றும் சேவைகள் சார்ந்த)**

**நோக்கம்:** இத்திட்டத்தின் கீழ் படித்த வேலையற்ற இளைஞர்கள் தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்ளவும், தொழில் தொடங்கவும் தொழிற்கூடங்களுக்கு அனுப்பி உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தகுதிகள்:**

- **குடியிருப்பு:** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சார்ந்தவர் (அல்லது) குறைந்த பட்சம் 3 வருடம் தொடர்ச்சியாக புதுச்சேரியில் வசிப்பவராக இருக்க வேண்டும்
- **ஆதாரம்:** பிறப்புச் சான்றிதழ் /படிப்புச் சான்றிதழ் /குடியிருப்புச் சான்றிதழ்
- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**வயது** : 18 முதல் 35 வரை

**கல்வித்தகுதி** : குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்

**பயிற்சிக்காலம்:** ஒரு வருடம்

**உதவித்தொகை:**

- **பயில்பவருக்கான உதவித்தொகை**

| வ. எண் | படிப்பு | மாதாந்திர உதவித்தொகை |
|---|---|---|
| (1) | ITI /10-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்தவருக்கு | ரூ.4500/-* மாதம் ஒன்றுக்கு |
| (2) | பட்டம் மற்றும் பொறியியல் துறையில் பட்டயம் (3 வருடம்) பெற்றவருக்கு | ரூ.7500/-* மாதம் ஒன்றுக்கு |
| (3) | பொறியியல் துறையில் பட்டம் (அல்லது) முதுகலை பட்டம் பெற்றவருக்கு (கலை மற்றும் அறிவியல்) | ரூ.9000/-* மாதம் ஒன்றுக்கு |

குறிப்பு: (*கல்வித்தகுதிக்கேற்ப பயிற்சிக்கு ஏற்ப நிர்ணயம் செய்யப்பட்ட உதவித் தொகை வழங்கப்படும்)

- **நிறுவனத்திற்கு:**

  **மூலப் பொருள் விரயத்திற்காக:**
  ரூ.900/- வீதம் ஒவ்வொரு பயில்பவருக்கு மாதம் ஒன்றுக்கு ஈட்டுத்தொகை வழங்கப்படும்.

- **விண்ணப்பிக்கும் காலம்:**
  உள்ளூர் செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்யப்படும்.

- **விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பங்களை **edistrict.py.gov.in** என்ற இணையதளம் வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

## 2. மேம்பட்ட / உயர் தொழில்நுட்ப பயிற்சி

**நோக்கம்:** நமது பக்கத்து மாநிலத்தில் அமைந்துள்ள பயிற்சி நிறுவனங்களுக்கு குறுகிய கால பயிற்சியாக, அடிப்படை தொழிற்கூட பயிற்சி முடித்தவர்களையும் மற்றும் உயர் தொழில்நுட்ப பயிற்சிபெற விருப்பம் உள்ளவர்களையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி சுயமாக தொழில் தொடங்கவும் தங்களுக்கு பொருத்தமான வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்ளவும் உயர் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தகுதிகள்:**

- **குடியிருப்பு:** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்தவர் (அல்லது) குறைந்தபட்சம் 3 வருடம் தொடர்ச்சியாக வசிப்பவர்
- **ஆதாரம்:** பிறப்புச் சான்றிதழ் / படிப்புச் சான்றிதழ்/குடியிருப்புச் சான்றிதழ்
- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**வயது** : 18 முதல் 35 வரை

**கல்வித்தகுதி** : பயிற்சி நிறுவனம் நிர்ணயம் செய்யும் கல்வித் தகுதிக்கு ஏற்ப.

**பயிற்சிக்காலம்:** பயிற்சி நிறுவனம் நிர்ணயம் செய்யும் காலத்திற்கு ஏற்ப.

**உதவித் தொகை:**

- **பயிற்சியருக்கு:**

| வ.எண். | கல்வித்தகுதிகள | மாதாந்திர உதவித் தொகை |
|---|---|---|
| 1 | 10ஆம் வகுப்பு / ITI தேர்ச்சி /12ம் வகுப்பு வரை | ரூ 7,500/- |
| 2 | பட்டதாரி/ (3 வருடம்) பட்டயம் மற்றும் முதுகலைப்பட்டம் பெற்றவர்களுக்கு | ரூ. 9,000/- |

**பயணக் கட்டணம்:**

ஒரு முறை பயிற்சி வழங்கப்படும் ஊருக்கு சென்றுவர 2ஆம் வகுப்பு இரயில் கட்டணம் வழங்கப்படுகிறது.

- **நிறுவனத்திற்கு**

நிறுவனம் நிர்ணயம் செய்யும் முழு பயிற்சிக்கட்டணம் (course fee) மற்றும் பயிற்சியர் தங்குவதற்கு விடுதிக்கட்டணம் (hostel fee) வழங்கப்படுகிறது.

**விண்ணப்பிக்கும் காலம்:** உள்ளூர் செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்யப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பங்களை **edistrict.py.gov.in** என்ற இணையதளம் வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**3. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்:**

**நோக்கம்:** தொழில் முனைவோர் நிர்வாகத்திறமையை மேம்படுத்த, திறம்பட நடத்திட மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்கப் பயிற்சி அளித்தல், தொழில் வளத்தை மேம்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரித்து நிறுவனத்தை திறம்பட நடத்திட பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தகுதிகள்:**

- **குடியிருப்பு:** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்தவர் (அல்லது) குறைந்த பட்சம் 3 வருடங்கள் தொடர்ச்சியாக வசிப்பவர்
- **ஆதாரம்** : பிறப்புச் சான்றிதழ் / படிப்புச் சான்றிதழ் / குடியிருப்புச் சான்றிதழ்
- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**பயிற்சிக் காலம்:** பயிற்சிக்கு ஏற்ப

**உதவித்தொகை:** பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் இத்திட்டத்தின்கீழ் செலவிடப்படும்

**பயிற்சி ஒருங்கிணைப்பாளர்:**
துணை இயக்க மேலாளர் (பொருளாதார ஆய்வுப் பிரிவு)

**செயல்படுத்தும் முகமை:**
மாவட்ட தொழில் மையம் (அல்லது) புதுச்சேரி மேலாண்மை மற்றும் உற்பத்தித் திறன் குழு/தொழில் துறையின் கீழ் இயங்கும் சங்கங்கள் / அரசு சாரா நிறுவனங்கள்

**4. புதுச்சேரி மேலாண்மை உற்பத்தித்திறன் குழுவிற்கு கொடை உதவியளித்தல்.**

**நோக்கம்:**

நமது அரசானது பயிற்சி கட்டணத்தை 90% மானியத்துடன் படித்து வேலையில்லா இளைஞர்களுக்கும், தொழிலதிபர்கள் / அவர்களது பிரதிநிதிகளுக்கும் தனிநபர் மேலாண்மை பயிற்சி, நிதி மேலாண்மை பயிற்சி, சந்தைப்படுத்தல் மேலாண்மை, தரக் கட்டுப்பாட்டுப் பயிற்சி, உற்பத்தித் திறன், தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் போன்றவைகளில் பயிற்சிகளை அளிப்பதன் மூலம் தொழில் வளத்தையும், வேலைவாய்ப்பையும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது சம்பந்தமாக புதுச்சேரி மேலாண்மை உற்பத்தி திறன் குழுமம் கேட்கும் தொகையை மேற்படி குழுமத்தின் ஆளும் குழு பரிந்துரையின்படி நிர்வாக கொடையாகவும், பயிற்சி கொடையாகவும் அளிக்கப்படுகிறது.

**அனுகப்பட வேண்டிய அதிகாரி**

துணை இயக்க மேலாளர் (பொருளாதார ஆய்வுப் பிரிவு)
மாவட்டத் தொழில் மையம், புதுச்சேரி

# IV. கைவினைத் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம்

<u>நோக்கம்:</u>

(i) கைவினைத் தொழில்களை புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வளர்க்கவும், மேம்படுத்தவும் செய்தல்.

(ii) அழிந்துவரும் கைவினைத் தொழிலை பாதுகாத்தல் மற்றும் விஸ்வகர்மா வகையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்களை புதுப்பித்தல்.

(iii) நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு திறமையை வளர்த்துக்கொள்ளுதல், கிராமப்புற ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஏற்றுமதி செய்யப்படும் கைவினைப் பொருள்கள் உற்பத்தி செய்தலில் அவர்களுக்கு முக்கிய பங்களித்தல்.

1. **கைவினைத் தொழில் பயிற்சி**

<u>நோக்கம்:</u>

(i) நலிந்த கைவினைத் தொழில்களை பாதுகாத்தல் மற்றும் பாரம்பரிய தொழில்களை புதுப்பித்தல்.

(ii) நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு திறமையை வளர்த்துக்கொள்ளுதல், கிராமப்புற ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஏற்றுமதி செய்யப்படும் கைவினைப் பொருள்கள் உற்பத்தி செய்தலில் அவர்களுக்கு முக்கிய பங்களித்தல்.

**தகுதிகள்**:

- **குடியிருப்பு:** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்தவர் (அல்லது) குறைந்த பட்சம் 3 வருடம் தொடர்ச்சியாக வசிப்பவர்.
- **ஆதாரம்** : பிறப்புச் சான்றிதழ் / படிப்புச் சான்றிதழ் / குடியிருப்புச் சான்றிதழ்.
- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**வயது**: 18 முதல் 35 வரை

**கல்வித் தகுதி** : எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

**பயிற்சிக் காலம்**: 6 மாதங்கள்

**வழங்கப்படும் உதவிகள்:**

- **பயில்பவருக்கு:**

  உதவித்தொகை ரூ.4500/- வீதம் மாதம் ஒன்றுக்கு/ ஒரு பயில்பவருக்கு

- **நிறுவனத்திற்கு:**

  (i) **மதிப்பூதியம்**

  ரூ.900/- பிரதிமாதம் / நபர் ஒன்றுக்கு (அதிகப்படியாக ரூ.9000/-வரை)

  (ii) **மூலப்பொருள் விரயத்திற்கு**

  ரூ.450/-வீதம் பிரதிமாதம்/நபர் ஒன்றுக்கு (அதிகப்படியாக ரூ.4500/-வரை)

**விண்ணப்பிக்கும் காலம்:**

உள்ளூர் செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்யப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பங்களை **edistrict.py.gov.in** என்ற இணையதளம் வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**2. கண்காட்சி நடத்துதல்**

**நோக்கம்**

கைவினைப் பொருட்களின் விற்பனையை சந்தையில் அதிகப்படுத்தும் பொருட்டு நம் மாநிலம் மற்றும் வெளி மாநிலங்களில் கண்காட்சிகள் நடத்துவதற்கும் மற்றும் கலந்து கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**தகுதிகள்:** கைவினைக் கலைஞர்களின் கைவினைத் தொழிலகம் புதுச்சேரி மாநிலத்தில் அமைந்திருக்க வேண்டும்.

**வழங்கப்படும் உதவிகள்:**

(i) கைவினைக் கலைஞர்கள் கண்காட்சிகளில் கலந்துகொள்வதற்கு கண்காட்சிகள் நடக்கும் இடத்திற்கு சென்றுவர 2ஆம் வகுப்பு பயணக் கட்டணம் வழங்கப்படும்.

(ii) இந்தியாவில் A1 நகரத்தில் நடைபெறும் கண்காட்சியில் கலந்து கொள்ளும் கைவினைக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தினசரி படிச்செலவு ரூ.300/- அளிக்கப்படும்.

(iii) இந்தியாவில் A1 நகரத்தை தவிர்த்து மற்ற நகரங்களில் நடைபெறும் கண்காட்சியில் கலந்துகொள்ளும் கைவினைக் கலைஞர்களுக்கு தினசரி படிசெலவு ரூ.200/- வழங்கப்படும்.

(iv) உள்ளூரில் நடைபெறும் கண்காட்சியில் கலந்துகொள்ளும் கைவினைக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு தினசரி படிச்செலவு ரூ.150/- வழங்கப்படும்.

(V) கைவினைப் பொருட்களை கண்காட்சி நடைபெறும் இடத்திற்கு எடுத்துச்செல்ல ஆகும் ஊர்தி கட்டணம் வழங்கப்படும்.

3. **நிர்வாகக்கொடை மற்றும் கைவினைக் கலைஞர்களின் சங்கங்களுக்கு புதுமை-புதுச்சேரி பொம்மை செய்யும் சங்கம், புகழ்-காரைக்கால் கைவினை கலைஞர்கள் சங்கம், காரைக்கால் மகளிர் சங்கம், ஏனாம் மகளிர் கூட்டுறவு சங்கம் போன்ற சங்கங்கள் இந்தியாவில் நடைபெறும் கண்காட்சியில் பங்கு பெறுவதற்கும், நடத்துவதற்கும் கொடை உதவி செய்தல்.**

**நோக்கம்:** புதுச்சேரி மாநிலத்தைச் சார்ந்த கைவினைக் கலைஞர்கள் உற்பத்திசெய்யும் பொருட்களின் விற்பனையை அதிகப்படுத்தும் பொருட்டு, மாநிலத்திற்குள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் கண்காட்சி நடத்துவதற்கும் மற்றும் கலந்து கொள்வதற்கும் கைவினைக் கலைஞர்களின் சங்கங்கள் மூலம் கண்காட்சிகள் நடத்த கொடை உதவி வழங்கப்படுகிறது.

**தகுதிகள்:**

(i) கைவினைக் கலைஞர்களின் சங்கங்கள் கூட்டுறவு சங்கமாக அல்லது ஏனைய சங்கங்களின் விதிகளுக்கு உட்பட்டு பதிவு செய்து இருக்க வேண்டும்.

(ii) சங்க உறுப்பினர்கள், புதுச்சேரி அரசு (அ) கைவினை வளர்ச்சி ஆணையர் ஒப்புதல் பெற்ற கைவினைக் கலைஞர்களாக இருக்க வேண்டும்.

(iii) புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை தான் சங்கங்கள் விற்பனை செய்ய வேண்டும்.

**வழங்கப்படும் உதவிகள் :**

❖ புதுமை கைவினைக் கலைஞர்களின் சங்கத்தின் மூலம் கண்காட்சிகள் நடத்த வருடத்திற்கு ரூ.10 இலட்சம் கொடை வழங்கப்படும்.

❖ மற்ற கூட்டுறவு சங்கங்களுக்கு கண்காட்சிகள் நடத்த மற்றும் இந்தியாவில் நடைபெறும் கண்காட்சியில் கலந்துகொள்ள வருடத்திற்கு ரூ.2 இலட்சம் கொடையாக 5 வருடங்களுக்கு வழங்குகிறது.

### 4. வயது முதிர்ந்த கைவினைக் கலைஞர்களுக்கு மாதாந்திர கொடை திட்டம் (ஓய்வூதியம்)

**நோக்கம்:** வயது முதிர்ந்த கைவினைக் கலைஞர்களை பாதுகாக்க.

**தகுதிகள:**

- ❖ விண்ணப்பப்படிவம் வழங்கும் தேதியில் 60 வயது பூர்த்தியாகி இருக்கவேண்டும்.
- ❖ ஆண்டு வருமானம் எல்லா வகையிலும் ரூ.75,000/- க்கு மிகாமல் இருக்கவேண்டும்.
- ❖ பிற நிர்வாகத்திடமிருந்து இதுபோன்று நிதி உதவி பெறாதவராக இருக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும் (அ) குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தொடர்ந்து வசித்து வருபவராக இருக்க வேண்டும்.

**ஆதாரம்:** உரிய தகுதி வாய்ந்த அதிகாரியிடம் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்

**நிதி உதவி:**

- ➢ கைவினைக் கலைஞருக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.2,000/- வழங்கப்படும்.
- ➢ அவர் மரணமடைந்தால் அவருடைய வாழ்க்கைத் துணைவியருக்கு ரூ.1000/- மாதம்தோறும் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும்**
**காலம்:** மேற்கண்ட தகுதிகள் பெற்றபின்

### 5. பாரம்பரிய தொழில்கள் / விஸ்வகர்மா வகையின் கீழ் உள்ள தொழில்களை மேம்படுத்தல் மற்றும் வளர்த்தல்

**(i) புதுச்சேரி மாநிலத்தில் பாரம்பரிய தொழில்புரியும் சங்கங்களுக்கும்/ விஸ்வகர்மா வகையின் கீழ் உள்ளவர்களுக்கும் நிதி உதவி அளித்தல்**

**நோக்கம் :** அழியும் நிலையில் உள்ள பாரம்பரிய தொழில்கள் மற்றும் விஸ்வகர்மா தொழில் வகைகளான – கருமான், பொற்கொல்லர், மரசிற்ப வேலை செய்யும் ஆசாரி போன்ற தொழில்களை வளர்க்கவும், மேம்படுத்தவும் செய்தல்.

**தகுதிகள் :**

- ❖ இச்சங்கத்தின் உறுப்பினர்கள் பாரம்பரிய தொழில் புரிபவராக / விஸ்வகர்மா வகையினராக இருக்க வேண்டும்.
- ❖ இச்சங்கமானது, கூட்டுறவு சங்கங்களின் (அல்லது) ஏனைய சங்கங்களின் சட்ட விதிப்படி பதிவு செய்திருக்க வேண்டும்.
- ❖ ஏற்கனவே உள்ள சங்கம் (அ) புதிய சங்கமாகவும் இருக்கலாம்.
- ❖ இச்சங்கத்தில் குறைந்த பட்சம் 25 உறுப்பினர்களாவது இருக்க வேண்டும்.

**உதவிகள் வழங்கும் முறை:**

- ❖ சங்கத்தை வளர்க்கவும், மேம்படுத்தவும் அதன் நிர்வாக செலவினங்களை எதிர்கொள்ளவும் வருடத்திற்கு அதிகப்படியாக ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும்**
**காலம்** : மேற்கண்ட தகுதிகள் பெற்றபின்

**(ii) பாரம்பரிய தொழில்கள் / விஸ்வகர்மா வகையின் கீழ் உள்ள தொழிலில் ஈடுபட்டு தங்களது தொழிலை தொடர்ந்து நடத்த முடியாத வயதான கைவினைக் கலைஞர்களுக்கு நிதி உதவியளித்தல்**

**நோக்கம்** : விஸ்வகர்மா வகையின் கீழ் பாரம்பரிய தொழில்புரியும் வயதான கைவினைக் கலைஞர்களைப் பாதுகாக்கும் பொருட்டு முதியோர் ஓய்வூதியம் வழங்குதல்.

**தகுதிகள்** :

- ❖ விண்ணப்பதாரர் பாரம்பரிய தொழிலகத்தின் / விஸ்வகர்மா வகையின் கீழ் உள்ள தொழிலகத்தின் உரிமையாளராக விண்ணப்பிக்கும் போது 60 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். மேலும் சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரரின் ஆண்டு வருமானம் எல்லா வகையிலும் ரூ.75,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் இதுபோன்று நிதி உதவி வேறு எங்கும் பெறாதவராக இருக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் குடியுரிமை பெற்றவராக இருக்க வேண்டும் (அ) குறைந்தது 10 வருடங்கள் தொடர்ச்சியாக புதுச்சேரியில் வசிப்பவராக இருக்க வேண்டும். இந்த குடியிருப்புச் சான்றிதழை தகுதி வாய்ந்த அதிகாரியிடம் பெற்றிருக்க வேண்டும்.

**நிதி உதவி** :

- ➢ கைவினைக் கலைஞர்களுக்கு மாதம் ரூ.2,000/- வழங்கப்படும்.
- ➢ கைவினைக் கலைஞர் இறந்த பிறகு அவரது துணைவியருக்கு மாதம் ரூ.1,000/- வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும்**
**காலம்:** மேற்கண்ட தகுதிகள் பெற்றபின்

**அனுப்பட வேண்டிய**
**அதிகாரி** : திட்ட மேலாளர்,
மாவட்டத் தொழில் மையம்,
புதுச்சேரி.

## V. தென்னைநார்த் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம்:

**நோக்கம்** : புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தென்னை நார் தொழில்களை வளர்க்கவும், மேம்படுத்தவும் செய்தல்.

1. பயிற்சி

**நோக்கம்** : தென்னைநார் மற்றும் தென்னைநாரை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை மேம்படுத்துதல், கிராமப்புற ஏழைகளுக்கு தென்னைநார் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பயிற்சியளித்தல் மேலும் இதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குதல்.

**பயிற்சி** : தென்னைநார்களைக் கொண்டு கயிறு மற்றும் மிதியடிகள் தயாரிக்கும் தொழில் பயிற்சி.

**தகுதிகள்** :

- **குடியிருப்பு:** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்தவர் (அல்லது) குறைந்த பட்சம் 3 வருடம் தொடர்ச்சியாக வசிப்பவர்.

- **ஆதாரம்** : பிறப்புச் சான்றிதழ் / படிப்புச் சான்றிதழ் / குடியிருப்புச் சான்றிதழ்.

- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**வயது** : 18 முதல் 35 வரை

**கல்வித்தகுதி** : எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

**பயிற்சிக் காலம்** : 6 மாதங்கள்

**வழங்கப்படும் உதவிகள்** :

- **பயிற்சியருக்கு**
  மாதாந்திர உதவித் தொகை ரூ. 4,500/-

- **நிறுவனத்திற்கு:**

  (i) மதிப்பூதியம் ரூ.900/- ஒரு மாதத்திற்கு ஒரு பயில்பவர் வீதம் (அதிகப்படியாக மாதம் ரூ.9000/- வரை) வழங்கப்படும்.

  (ii) மூலப் பொருள் விரயத்திற்காக இழப்பீடு ரூ.600/- ஒரு மாதத்திற்கு ஒரு பயில்பவர் வீதம் (அதிகப்படியாக மாதம் ரூ.6,000/- வரை) வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் காலம்** : உள்ளூர் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பங்களை **edistrict.py.gov.in** என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும்.

## 2. மேம்பட்ட/உயர்திறன் தொழில்நுட்ப பயிற்சி

**நோக்கம்:** தென்னைநாரைக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்யவும், தற்போதைய தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், கயிறு கலைஞர்கள் விருப்பத்திற்கு ஏற்ப புதிய தொழில்நுட்பங்களை கற்றுக் கொள்ளவும் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு அனுப்பி மேம்பட்ட பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தகுதிகள் :**

- **குடியிருப்பு** - விண்ணப்பதாரர் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்தவர் (அ) குறைந்த பட்சம் 3 வருடம் தொடர்ச்சியாக வசிப்பவர்.
- **ஆதாரம் :** பிறப்புச் சான்றிதழ் /படிப்புச் சான்றிதழ் /குடியிருப்புச் சான்றிதழ்
- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**வயது:** 18 முதல் 35 வயது வரை:

**கல்வித்தகுதி:** மேம்பட்ட பயிற்சியளிக்கும் நிறுவனம் நிர்ணயிக்கும் கல்வித் தகுதிக்கேற்ப.

**பயிற்சி காலம்:** மேம்பட்ட பயிற்சியளிக்கும் நிறுவனம் நிர்ணயிக்கும் கால அளவு

**விண்ணப்பிக்கும் காலம் :** செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பங்களை **edistrict.py.gov.in** என்ற இணையதளம் வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**வழங்கப்படும் உதவிகள் :**

- **பயில்பவருக்கு**

  (i) **உதவித்தொகை:**
  ரூ.7,500/-ஒருமாதத்திற்கு/ஒரு பயில்பவர் வீதம் வழங்கப்படும்.

  (ii) **விடுதிக்கட்டணம்:**
  பயிற்சி நிறுவனம் நிர்ணயம் செய்யும் கட்டணம்

  (iii) **பயணக் கட்டணம்:**
  ஒரு முறை பயிற்சி வழங்கப்படும் ஊருக்கு சென்றுவர 2ஆம் வகுப்பு இரயில் கட்டணம் வழங்கப்படும்.

- **பயிற்சி நிறுவனத்திற்கு/பயிற்சியகத்திற்கு**

  **பயிற்சி கட்டணம்**

  பயிற்றுவிக்கும் நிறுவனம் பரிந்துரைக்கும் பயிற்சிக் கட்டணம்.

**3. தென்னைநார் தொழிற்கலைஞர்கள் புதிய தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ள சுற்றுலா அழைத்துச்செல்லும் திட்டம்**

**நோக்கம்:** பிறமாநிலங்களில் உள்ள புதிய மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தென்னைநார் பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு தொழிற்கலைஞர்களை தொழிற்கல்வி பயண சுற்றுலாவாக அழைத்துச் சென்று புதிய தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளச்செய்தல்.

**வழங்கப்படும் உதவிகள்:** சுற்றுலா சம்மந்தப்பட்ட செலவினங்களான பயணச்செலவு, தங்கும் விடுதி கட்டணம், நிறுவனங்களை பார்க்க செல்லும் கட்டணச்செலவு மேலும் இதில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு கயிறு கலைஞருக்கும் ஒரு நாளைக்கு தினப்படியாக ரூ.150 வழங்கப்படும்.

**4. தென்னைநார் தொழிற்சங்கங்களுக்கு / முகவாண்மைகளுக்கு/ குழுமங்களுக்கு கொடை உதவியளித்தல்**

**நோக்கம்:**

தென்னைநார் தொழிற்கூடங்களை அதிகப்படுத்துதல் மேலும் வேலையில்லா கிராமப்புற இளைஞர்கள் / கயிறு கலைஞர்கள் தங்களை தென்னைநார் பொருட்களை உற்பத்திசெய்தல் மற்றும் விற்பனைசெய்தலில் ஈடுபடுத்திக்கொள்ள ஊக்கப்படுத்துதல். தென்னைநார் தொழிற்சாலைகளை புதுச்சேரி மாநிலத்தில் வளர்க்க. தென்னை நார் தொழில் சங்கங்களுக்கு/ முகவாண்மைகளுக்கு/ குழுமங்களுக்கு நிற்வாகம் மற்றும் வளர்ச்சி கொடை உதவி அளித்தல்.

**தகுதிகள்:**

(i) சங்கங்கள் /முகவாண்மைகள் /குழுமங்கள் தென்னைநார் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும். சங்கத்தின் உறுப்பினர்கள் தென்னைநார் தொழில் புரிபவராக இருக்கவேண்டும்.

(ii) சங்கங்கள் /முகவாண்மைகள்/குழுமங்கள், கூட்டுறவு சங்கங்களின் (அ) ஏனைய சங்கங்களின் விதிப்படி பதிவு செய்திருக்க வேண்டும்.

**வழங்கப்படும் உதவிகள்:**

சங்கங்கள்/முகவாண்மைகள்/குழுமங்களின் நிர்வாகச்செலவு மற்றும் வளர்ச்சி நிதிக்காக வருடத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 5 வருடங்களுக்கு கொடை உதவி வழங்கப்படும்.

**5. முதலீட்டுக் கடன் பெறுவதற்கான விளிம்புத்தொகை கொடையுதவி**

**நோக்கம்:**

புதியதாக தொழில் முனைவோர்கள் தென்னைநார்த் தொழிற்சாலைகள் அமைத்தல் அல்லது நடந்து கொண்டிருக்கும் நிறுவனத்தை புதுப்பிக்க தொழில் முனைவோர்களுக்கு விளிம்புத்தொகை கொடை உதவியளித்து ஊக்குவித்தல்.

**தகுதிகள்:**

(i). தென்னைநார்த் தொழிற்சாலை புதுச்சேரி மாநிலத்தில் அமைந்திருக்க வேண்டும்

(ii) கடன் பெறுபவர் கடன் கொடுக்கும் நிதிநிறுவனத்திடமிருந்து இசைவு கடிதம் பெற்றுவர வேண்டும்.

(iii) விளிம்புத்தொகை கொடை உதவி பெற்ற 6 மாத காலகெடுவிற்குள் விற்பனைக்கான பொருட்களின் உற்பத்தியை தொடங்கவேண்டும்.

(iv) தொழில் முனைவோர்கள், தங்களால் தொடங்கப்படும் நிறுவனத்தை தொடர்ச்சியாக 5 வருடங்கள் நடத்துவேன் என உறுதிமொழி கடிதம் கொடுக்கவேண்டும்.

**உதவிகள் வழங்கும் முறை :**

நிதி நிறுவனத்திடம் இருந்து கடன் கொடுப்பதற்கான ஒப்புதல் கடிதத்தை பெற்றவுடன் 25 சதவீத விளிம்புத்தொகையை கடன் பெறும் நிறுவனர் பெயரில் வங்கியில் செலுத்தப்படும். உதாரணமாக கடன் தொகை 1.00 கோடி திட்டத்தொகையாக இருந்தால் ரூ. 25 இலட்சம் விளிம்புத்தொகை கொடையாக பயனாளியின் பெயரில் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

**6. மூலப்பொருட்கள் வாங்குவதற்கு கொடை உதவியளித்தல்**

புதுச்சேரி மாநிலத்தில் தென்னைநார் தொழிற்சாலைகள் வளர்ச்சியடைய மூலப்பொருட்கள் வாங்குவதற்கு கொடை உதவியளிப்பதன் மூலம் அண்டை மாநிலங்களில் நிலவும் போட்டியிலிருந்து புதிய நிறுவனங்கள் காப்பாற்றப்படுகின்றன. இதனை கருத்தில் கொண்டு ஒரு நிறுவனத்திற்கு ஒரு வருடத்தில் வாங்கும் மூலப்பொருட்களில் 15 சதவீதம் அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை கொடை உதவி வழங்கப்படுகிறது..

**7. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்**

**நோக்கம்:**

தென்னைநார்ப் பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலையை தொடங்க தொழில் முனைவோர்களுக்கு மேம்பட்ட தென்னைநார் தொழிற்பயிற்சியளித்து ஊக்கப்படுத்தப்படுகிறது. தென்னைநார் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள, தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மாநில அரசின் திட்டங்களின் கொடை நிதியிலிருந்து அளிக்கப்படும் ஊக்கத்தொகை பற்றி அறிந்துகொள்ள விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தப்படுகிறது.

**அணுகப்பட வேண்டிய அதிகாரி** : திட்ட மேலாளர்,
மாவட்டத் தொழில் மையம்,
புதுச்சேரி.

## VI. சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம்

**நோக்கம்:**

குறு/ சிறு / நடுத்தர நிறுவனங்கள் மற்றும் குடிசைத் தொழில்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனையை அதிகப்படுத்துதல்.

**வழங்கப்படும் உதவிகள்**

(i) **விற்பனை தள்ளுபடி**

- அரசால் அங்கீகரிக்கப்பட்டு, புதுச்சேரி மாநிலத்தில் அமைந்துள்ள கைவினை, குறு மற்றும் சிறு நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனைசெய்யும் விற்பனையகம் மற்றும் புதியதாக நிறுவப்பட்ட விற்பனையகம் மூலமாக விற்பனை செய்யப்படும் பொருட்கள், 15 சதவிகிதம் விற்பனை தள்ளுபடியை பெறும் தகுதியை பெறுகின்றது. ஒவ்வொரு விற்பனையகமும் 15 சதவிகிதம் விற்பனை தள்ளுபடித் தொகையாக வருடத்திற்கு அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வரை பெற்றுக்கொள்ளலாம்.

(ii) **கண்காட்சி / முதலீட்டாளர்கள் சந்திப்பு / கருத்தரங்குகள் நடத்துதல் / வர்த்தக கண்காட்சிகளில் கலந்துகொள்ளுதல்**

- புதுவையில் முதலீடு செய்ய, முதலீட்டாளர்களை கவரும் விதத்தில் முகாம்கள், முதலீட்டார்களின் சந்திப்பு கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்த ஏற்பாடு செய்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை முக்கியமான நகரங்கள் மற்றும் தலைநகரங்களில் கண்காட்சி மூலம் சந்தைப்படுத்துதல் மற்ற முகமையால் நடத்தப்படும் கண்காட்சியில் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை காட்சிக்கு வைத்தல், கைவினைப் பொருட்கள் மற்றும் குடிசைத் தொழில் பொருட்களை காட்சிக்கு வைத்து விற்பனை செய்தல். இது அவர்களுடைய பொருட்களை விற்பனை சந்தையில் அதிகப்படுத்த உதவும்.

- இந்திய அரசு நிறுவனங்கள், மற்ற நிறுவனங்கள் நடத்தும் வர்த்தக பொருட்காட்சிகளில் கலந்து கொண்டு தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களை விளம்பரப்படுத்தவும், அரங்கம் அமைத்து

கைவினை / குறுந்தொழில் / குடிசை தொழில் பொருட்களை விற்பனை செய்யவும் ஆவண செய்யப்படும். மேலும் பொருட்காட்சிகளில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு கைவினை கலைஞருக்கும் நாள் ஒன்றுக்கு மதிப்பூதியமாக ரூ.400/- மற்றும் சென்றுவர 2ஆம் வகுப்பு இரயில் கட்டணமும் வழங்கப்படும்.

- ➢ இந்திய தலைநகர் புதுடில்லியில் நடைபெறும் பன்னாட்டு வர்த்தக கண்காட்சி மற்றும் முக்கிய நகரங்களில் நடைபெறும் கண்காட்சியில் கலந்துகொள்ளும் அலுவலர்களுக்கு மதிப்பூதியம் மற்றும் குளிர்கால ஆடை வழங்குதல்.
- ➢ சாதாரணமாக வழங்கப்படும் தினப்படியுடன் நாள் ஒன்றுக்கு ரூ.400/- மதிப்பூதியமாக வழங்கப்படும்.
- ➢ இதுபோன்று வர்த்தக கண்காட்சிகள் நடைபெறும்போது குளிர்கால ஆடைக்காக ரூ.3,500/- வழங்கப்படுகிறது.

**(iii) வாங்குவோர்-விற்போர் சந்திப்பு நிகழ்ச்சி / வர்த்தக கண்காட்சி**

➢ வியாபார சந்தையை அதிகப்படுத்த வாங்குவோர்-விற்போர் சந்திப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. மேலும் வாங்குவோர்-விற்போரின் கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் வியாபாரத்தை அதிகப்படுத்துவதாகும். நல்ல வியாபார நோக்குடன் செயல்பட வாங்குவோர்-விற்போர் சந்திப்பு நிகழ்ச்சியை மாவட்டத் தொழில் மையம் நேரிடையாகவும் அல்லது மத்திய, மாநில அரசு துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்படுகிறது. அதற்காகும் செலவீனங்கள் இந்த திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

**(iv) தொழிற்சங்கங்கள் / கைவினை தொழில் சங்கங்கள்/ அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் சங்கங்கள் மூலம் அமைக்கப்படும் விற்பனை காட்சியகங்களுக்கு நிதி உதவியளித்தல்:**

➢ கைவினை, தென்னைநார், சணல், குறு மற்றும் சிறு தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களின் உற்பத்தியை அதிகபடுத்த அந்தந்த சங்கங்களின் மூலம் விற்பனையகம் அமைக்க நிதி உதவியளிக்கப்படுகிறது. இந்தியாவின் முக்கிய நகரங்கள் மற்றும் அதே பகுதியில் அமைக்கப்படும் விற்பனையகங்களின் உள்கட்டமைப்பு மற்றும் அலங்கார வசதிகள் செய்ய நிதி உதவி அளிக்கப்படுகிறது. இதற்காகும் மொத்த செலவினங்கள் இந்த திட்டத்தின்கீழ் ஏற்கப்படும்.

**(v) கைவினை, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களால் அமைக்கப்படும் விற்பனையகங்களுக்கு வாடகை மானியம் அளித்தல்**

➢ விற்பனை சந்தையை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிறுவனங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 90 சதவீத வாடகை மானியம் ரூ.10,000/- க்கு மிகாமல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். நிதி உதவியானது விற்பனையகங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யவும் நீட்டிக்கப்பட்டுள்ளது. குறைந்தது 3 ஆண்டுகள் தொடர்ந்து விற்பனையகங்களை நடத்தும் நிறுவனங்களுக்கு உள்கட்ட அலங்கார வசதிகள் செய்தால் அதற்கு 75 சதவீதம் அல்லது ரூ.1.50 இலட்சம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும்.

**(vi) சிறு மற்றும் நடுத்தர தொழில் தொகுப்பு நிறுவனங்களின் சங்க வளர்ச்சிக்காக தொழில் நிறுவனங்கள், இந்திய தொழில்களின் கூட்டமைப்பு மற்றும் அரசு சாரா தொழில் நிறுவனங்களுக்கு கொடையுதவி**

➢ தொழிற்சங்கங்கள், இந்திய தொழில் கூட்டமைப்பு, அரசு சாரா தொழில் நிறுவனங்களுக்கு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் தொகுப்பு நிறுவனம் அமைக்க மேற்படி நிறுவனங்களுக்கு அவர்கள் செலவு செய்த தொகையில் நிதி உதவியாக 75 சதவீதம் அதிகபட்சமாக ரூ.3.00 லட்சம் வரை கொடையாக ஒரு தொகுப்பு நிறுவனத்திற்கு அளிக்கப்படும்.

**(vii) விளம்பரத்திற்கான திட்டங்கள்**

➢ தொழில் வளர்ச்சி சம்பந்தமாக செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள் / தொழிற்பயிற்சி மற்றும் அதைச் சார்ந்த கொடைகள் / உதவிகள் முதலானவைகள் தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வேலையில்லா மாணவ / மாணவிகள் பொதுமக்கள் ஆகியோர்களிடம் மிக விரைவில் சென்றடைய மின்னணு ஊடகம் மூலமாக அதாவது தொலைக்காட்சி, அலுவலக வலைத்தளம், செய்தித்தாள் மூலமாக விளம்பரம் செய்யப்படும். பொருட்காட்சிகள் /கண்காட்சிகள் முதலீட்டாளர்கள் சந்திப்பு கூட்டங்கள் நடைபெறும்போது இம்மையத்தின் திட்டங்கள் சம்மந்தமான கையேடுகள் வழங்கப்படும்.

**அணுகப்பட வேண்டிய அதிகாரி:**

துணை இயக்க மேலாளர் (மூலப்பொருட்கள் பிரிவு)
மாவட்டத் தொழில் மையம், புதுச்சேரி

## VII. கதர் மற்றும் கிராம தொழில் வாரிய வளர்ச்சித் திட்டம்

**நோக்கம் :**

- கதர் மற்றும் கிராமிய தொழில்களை வளர்ப்பதன் மூலம் கிராமங்களில் வேலைவாய்ப்பை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கதர் மற்றும் கிராமிய தொழில் வாரியத்தின் நிர்வாக செலவு மற்றும் இதர செலவினங்களுக்காக இத்திட்டத்தின் கீழ் நிர்வாகக்கொடையாக நிதி உதவி வழங்கப்படுகிறது.

**வாரியத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு.**

i. கதர் மற்றும் கிராமிய தொழிற்சாலைகளை தொடங்குதல் மற்றும் நடத்துதல்.

ii. கிராமப்புறங்களில் கதர் மற்றும் கிராமிய தொழிற்சாலைகள் தொடங்க கிராமப்புற மக்களுக்கு பயிற்சி அளித்தல், கடன் மற்றும் மானியம் வழங்கி ஊக்குவித்தல்.

iii. கதர் மற்றும் கிராமிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனையகம் / காட்சியகத்தில் பார்வைக்கு வைத்து வியாபாரத்தை பெருக்குதல்.

## VIII. வேலை கிடைக்காத நபர்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கான ஊக்குவிக்கும் - 2006 திட்டம் (மாநில அரசு)

**நோக்கம்:**

புதுச்சேரி மாநிலத்தை சேர்ந்த வேலை கிடைக்காத நபர்கள் உற்பத்தி மற்றும் சேவைப்பிரிவுகளில் சுயத் தொழில் தொடங்க ஊக்குவித்தல்.

**தகுதிகள்:** புதுச்சேரி மாநிலத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.

**வயது:** வங்கிகளின் விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

**கல்வித்தகுதி** : எழுத படிக்கத்தெரிந்திருக்க வேண்டும்.

**வருமானம் :** உச்ச வரம்பு இல்லை.

**செயல்பாடுகள் / தொழில்கள்:**

- அனைத்து சேவை மற்றும் உற்பத்தி தொழில்கள் மேலும் சுயதொழில் உற்பத்தி மற்றும் சேவை தொழில்களான இயந்திரத்தால் இயங்கும் சலவைத் தொழில், அழகு நிலையம், தையலகம், சுகாதார முறைப்படி இயங்கும் தேநீர் விடுதி, காபி நிலையம் போன்றவைகள்

**திட்டச்செலவு:** ரூ.2 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கு

**நிதியுதவி:** வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் நிதயுதவி பெறுதல்

**மானியம்:**

❖ **புதுச்சேரி மாவட்டத்திற்கு(மாகி. ஏனாம் பகுதிகள் உட்பட)**

(i) திட்டச்செலவு ரூ.50,000/- க்கு மிகாமல் இருப்பின், ஆரம்ப மற்றும் முன் செயல்பாட்டு செலவு நீங்கலாக, 50% திட்டச்செலவு மானியமாக வழங்கப்படும்.

(ii) திட்டச்செலவு ரூ.50,000/- க்கு மேல் ரூ 2,00,000/- க்கு குறைவாக இருப்பின், ஆரம்ப மற்றும் முன் செயல்பாட்டு செலவு நீங்கலாக 35% திட்டச்செலவு அதிகபட்சம் ரூ.35,000/- மானியமாக வழங்கப்படும்.

❖ **காரைக்கால் மாவட்டத்திற்கு மட்டும்**

(i) திட்டச்செலவு ரூ.50,000/- க்கு மிகாமல் இருப்பின், 55% திட்டச்செலவு மானியமாக வழங்கப்படும்.

(ii) திட்டச்செலவு ரூ.50,000/- க்கு மேல் ரூ2,00,000/- க்கு குறைவாக இருப்பின், 40% திட்டச்செலவு அதிகபட்சம் ரூ40,000/- மானியமாக வழங்கப்படும்.

**கடன் வழங்கப்படும் காலம்:**

பயனாளி, வங்கியில் முறைப்படி கேட்கப்படும் தேவையை நிறைவேற்றிய உடன் கடன் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பங்களை edistrict.py.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும்.

**மேலும் விவரங்களை அறிந்துகொள்ள அணுகப்பட வேண்டிய அதிகாரி**

இயக்க மேலாளர்,
மாவட்டத் தொழில் மையம், புதுச்சேரி

## IX. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் (மத்திய அரசு)

**நோக்கம்:**

படித்து வேலை கிடைக்காத நபர்களுக்கு சுய தொழில் துவங்க வங்கிகள் மூலம் தொழில் மற்றும் சேவை பிரிவுகளில் கடன் வழங்க ஏற்பாடு செய்தல்.

**தகுதிகள்:**

புதுச்சேரி மாநிலத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக வசித்து வருபவராக இருக்க வேண்டும்

**வயது :** 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள்

**கல்வித்தகுதி:**

- திட்டச்செலவானது சேவையை அடிப்படையாகக்கொண்ட தொழில்களுக்கு ரூ.5 இலட்சத்திற்கு குறைவாகவும், உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு ரூ.10 இலட்சத்திற்கு குறைவாகவும் இருந்தால் பயனாளிக்கு கல்வித்தகுதி தேவையில்லை,

- திட்டச்செலவானது உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களுக்கு ரூ.10 இலட்சத்திற்கு அதிகமாகவும், சேவையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களுக்கு ரூ.5 இலட்சத்திற்கு அதிகமாகவும் இருந்தால் பயனாளியின் கல்வித்தகுதி குறைந்த பட்சம் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**திட்டச்செலவு**

- உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களுக்கு திட்டசெலவானது அதிகபட்ச தொகையாக ரூ.50 இலட்சமும்.

- சேவையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களுக்கு திட்டச் செலவானது அதிகபட்ச தொகையாக ரூ.20 இலட்சமும் வழங்கப்படும்.

**வருமானம் :** வருமான வரம்பு இல்லை.

**பயிற்சிக்காலம்**

- தொழில்முனைவோர் வளர்ச்சித்திட்டத்திற்கான பயிற்சியானது 2 முதல் 3 வாரம் கட்டாயப் பயிற்சியாக வழங்கப்படுகிறது.

**தொழில் முனைவோர் செலுத்த வேண்டிய விளிம்புத்தொகை(சொந்த பங்களிப்பு)**

திட்ட வரைவு தொகையில்
பொது பிரிவு- - 10%

சிறப்பு பிரிவு -(அட்டவணை இனத்தவர், பழங்குடியினர்,
பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் சிறுபான்மையினர் - 5%
பெண்கள், ஓய்வு பெற்ற இராணுவத்தினர், ஊனமுற்றோர்.)

**மானிய விவரங்கள்:**

| **திட்ட வரைவு தொகையில்** | **நகரம்** | **கிராமம்** |
|---|---|---|
| பொதுப்பிரிவு | **15%** | **25%** |
| சிறப்பு பிரிவு -(அட்டவணை இனத்தவர், பழங்குடியினர் பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் சிறுபான்மையினர், பெண்கள், ஓய்வுபெற்ற இராணுவத்தினர், ஊனமுற்றோர்.) | **25%** | **35%** |

**கடன் வழங்கப்படும் காலம் :**

வரையறுக்கப்பட்ட பயிற்சி முடித்த பிறகே கடன் வழங்கப்படும்.

**செயல்படுத்தும் முகமை**

மாவட்டத் தொழில் மையம், புதுச்சேரி மற்றும்
புதுச்சேரி கதர் மற்றும் கிராமிய தொழில் வாரியம்

**ஒருங்கிணைப்பு முகமை**

கதர் மற்றும் கிராமிய தொழில் ஆணையம்

**அணுகப்பட வேண்டிய அதிகாரி**

இயக்க மேலாளர், மாவட்டத் தொழில் மையம், புதுச்சேரி.

**குறிப்பு:**

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை கீழ்க்கண்ட இனணயதளம் வழியாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

. https://www.kviconline.gov.in/pmegpeportal/pmegphome/index.jsp

## X. பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டம்

**நோக்கம்:**

- கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள கலைஞர்கள் மற்றும் கைவினை கலைஞர்கள் அவர்களுடைய பராம்பரிய தொழில்களுக்கு ஆதரவு வழங்குதல். அதாவது (i) தச்சர் (சுதார்) (ii) படகு தயாரிப்பாளர் (iii) கவசம் தயாரிப்பாளர் (iv) கொல்லர் (லோஹர்) (v) சுத்தியல் மற்றும் கருவிகள் தயாரிப்பவர் (vi) பூட்டு தயாரிப்பவர் (vii) பொற்கொல்லர் (சோனார்) (viii) குயவர் (கும்ஹார்) (ix) சிற்பி (மூர்த்திகர், கல் தச்சர்), கல் உடைப்பவர் (x) காலணி தைப்பவர் (சார்மர்)/காலணி தொழிலாளி /காலணிக் கைவினைஞர் (xi) கொத்தனார் (ராஜமிஸ்திரி) (xii) கூடை / பாய் / துடைப்பம் தயாரிப்பவர் / தென்னை நாரில் கயிறு திரிப்பவர் (xiii) பொம்மை தயாரிப்பவர் (பாரம்பரியம்) (xiv) முடி திருத்தும் தொழிலாளர் (நயி) (xv) பூமாலை தொடுப்பவர் (பூக்காரர்) (xvi) சலவைத் தொழிலாளி (டோபி) (xvii) தையல்காரர் (டார்ஸி) (xviii) மீன்பிடி வலை தயாரிப்பவர்
- கலைஞர்கள் மற்றும் கைவினை கலைஞர்களை விஸ்வகர்மா திட்டத்தில் அனைத்து நன்மைகளையும் பெற தகுதியுடையவர்களாக ஆக்குதல்.
- அவர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்களின் தகுதிக்கேற்ப பொருத்தமான பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கு திறன் மேம்பாட்டை வழங்குதல்.
- அவர்களின் திறனை அதிகரிக்க, தயாரிப்பு மற்றும் தரத்தை மேம்படுத்த சிறந்த மற்றும் நவீன கருவிகளை வழங்குதல்.
- உத்தேசித்துள்ள பயனாளிகளுக்கு பிணை இல்லாத கடனுக்கான எளிதான அணுகலை வழங்குதல் மற்றும் வட்டி மானியம் வழங்குவதன் மூலம் கடன் செலவைக் குறைத்தல்.
- இந்த விஸ்வகர்மா கலைஞர்களின் டிஜிட்டல் அதிகாரமளிப்பை ஊக்குவிப்பதற்காக டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான ஊக்குவிப்புகளை வழங்குதல்.
- அவர்களுக்கு புதிய வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சிக்காக விளம்பரம் மற்றும் சந்தை இணைப்புகளுக்கான வாய்ப்பு வழங்குதல்.

**தகுதிகள்:**

- ❖ மேற்கூறிய வர்த்தகத்தில் கைகள் மற்றும் கருவிகளால் பணிபுரியும் கலைஞர்கள் பதிவு செய்ய தகுதியுடைவர்கள்
- ❖ ஒரு குடும்பத்தில் ஒரு உறுப்பினர் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.
- ❖ குறைந்தபட்ச வயது 18 ஆக இருக்க வேண்டும்
- ❖ அவன்/அவள் பதிவு செய்யும் பொழுது ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும் மற்றும் மத்திய/மாநில அரசிடமிருந்து கடந்த 5 ஆண்டுகளில் சுய வேலைவாய்ப்புக்காக இதே போன்ற கடன் அடிப்படையிலான திட்டங்களின் கீழ் கடன் பெற்றிருக்கக் கூடாது. எ.கா. PMEGP மற்றும் PM SVANidhi. இருப்பினும் கடனை திருப்பிச் செலுத்திய MUDRA மற்றும் PM SVANidhi ஆகியவற்றின் பயனாளிகள் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள்.
- ❖ அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**பதிவு:**

- விண்ணப்பதாரர் ஆதார் அட்டை (அ) மொபைல் எண் விவரங்களைப் பயன்படுத்தி பொது சேவை மையத்தின் மூலம் பதிவு செய்ய வேண்டும்.
- பயனாளிகளின் விவரங்கள் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகத் தலைவரால் சரிபார்க்கப்படும்
- மாவட்ட செயலாக்கக் குழு இறுதியில் பயனாளிகளின் பட்டியலை ஆய்வு செய்து பரிந்துரைக்கும்.
- ஓவ்வொரு மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் பதிவு செய்தவர்களை MSME, MSDE, மாநில முன்னணி வங்கியாளர்கள் அடங்கிய திரையிடல் குழு மேற்பார்வையிட்டு இறுதி ஒப்புதலை வழங்கும்.

**பதிவு பயன்கள்:**

- வெற்றிகரமான பதிவு மற்றும் சரிபார்ப்புக்குப் பிறகு, பயனாளிக்கு விஸ்வகர்மா அங்கீகாரம் அளித்து சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கப்படும்.

- திறன் சரிபார்ப்புக்கு பிறகு, பயனாளிகளுக்கு ஈ-வவுச்சர்களைப் பயன்படுத்தி கருவித் தொகுப்புக்காக ஊக்குவிப்பு ரூ.15000/- வழங்கப்படும்.
- திறன் பயிற்சி 5-6 நாட்களுக்கு வழங்கப்படும்.
- பயிற்சிக் காலத்தில் தினசரி உதவித்தொகை நாள் ஒன்றுக்கு ரூ.500/- வழங்கப்படும்.

**நிதி உதவி:**

- அடிப்படை திறன் பயிற்சிக்குப் பிறகு, பயனாளி பிணையில்லாத கடனைப் பெற தகுதியுடையவர்.
- வங்கிகள் மூலம் முதல் தவணையாக 18 மாதங்கள் திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 5% வட்டி விகிதத்தில் ரூ.1,00,000/- வரை கடன் வழங்கப்படும்.
- மேம்பட்ட உயர் திறன் பயிற்சிக்குப் பிறகு, பயனாளி இரண்டாவது தவணை கடனுக்குத் தகுதி பெறுவார்.
- வங்கிகள் மூலம் இரண்டாவது தவணையாக 30 மாதங்கள் திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 5% வட்டி விகிதத்தில் ரூ.2,00,000/- வரை கடன் வழங்கப்படும்.
- பயனாளிக்கு டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான ஊக்கத்தொகையாக ரூ.1/- (ஒரு பரிவர்த்தனை ஊக்குவிப்பு), அதிகபட்சம் 100 பரிவர்த்தனைக்கு (மாதாந்திரம்) வழங்கப்படும்.

**சலுகை வட்டி மற்றும் மானியம் (அ) பராமரிப்பு வட்டி மற்றும் உத்திரப்படுத்தல்:**

- பயனாளிகளிடமிருந்து பெறும் கடனுக்கான சலுகை வட்டி விகிதம் 5% ஆக நிர்ணயிக்கப்படும். இந்திய அரசாங்கத்தின் வட்டி மானியம் 8% அளவிற்கு இருக்கும் மற்றும் வங்கிகளுக்கு முன்கூட்டியே வழங்கப்படும்.
- கடனின் முதல் மற்றும் இரண்டாவது தவணைகளுக்கும் வட்டி மானியத்தைப் பெற பயனாளி தகுதியுடையவர்.

**சந்தை உதவி:**

- தரச் சான்றிதழ், சரிபார்ப்பு, பிராண்டிங், ஈ-வணிக மற்றும் (GeM) தளத்தில் சேர்க்கையும், விளம்பரம், பிரச்சாரம் மற்றும் பிற செயல்பாடுகள் போன்ற வடிவங்களில் சந்தை ஆதரவு பயனாளிகளுக்கு உள்நாடு மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுடன் தொடர்பை மேம்படுத்துவதற்காக விரிவுபடுத்தப்படும்.

**மேலும் விவரங்களுக்கு அணுகப்பட வேண்டிய அதிகாரி:**

இயக்க மேலாளர், மாவட்டத் தொழில் மையம்,
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி

## XI. வழிகாட்டல் மற்றும் உதவிபுரிதல்.

தொழில் முனைவோர் / வேலையில்லா இளைஞர்கள் மாவட்டத் தொழில் மையத்தில் உள்ள மக்கள் தொடர்பு அதிகாரியை அணுகி தொழில் தொடங்கத் தேவையான வழிமுறைகள் மற்றும் உதவிகளை பெறலாம்.

## XII. சேவை பெறுநர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவன

தொழில் முனைவோர்கள்/ தொழிலதிபர்கள்/ படித்த வேலையில்லா இளைஞர்கள்/ கைவினைக் கலைஞர்கள் / கைவினைக் கலைஞர்களின் சங்கங்கள் தங்களின் விண்ணப்பப் படிவங்களை சரியாக பூர்த்தி செய்து அதில் கேட்கப்படும் ஆவணங்களை அதனுடன் இணைத்து கொடுக்க வேண்டும்.

திட்டங்களுக்கான செயல்முறைகளை பயிற்சியாளர்கள்/ பயிற்சிபெறுபவர்கள்/ சங்கங்கள் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

நிதியுதவி பெறுபவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவன, தாங்கள் பெற்ற கடன் தொகையை முழுமையாக செலுத்த வேண்டிய காலக்கெடுவிற்குள் செலுத்த வேண்டும் மேலும் அந்தப் பகுதியில் வசிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும்.

## XIII. குறைதீர்த்தல்

சேவை தரநிலைகள் இணக்கமில்லா நிலையில் இருப்பின், பயனாளிகள் மற்றும் பங்குதாரர்கள் தங்கள் குறைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள பொது மக்கள் குறைதீர்க்கும் அதிகாரிகளை அணுகி தங்கள் குறைகளை தீர்த்துக்கொள்ளலாம்.

**இயக்க மேலாளர்,**
**மாவட்டத் தொழில் மையம்,**
**தொழிற்பேட்டை,**
**தட்டாஞ்சாவடி,**
**புதுச்சேரி – 605009.**

## XIV. குறைதீர்த்தலின் விரிவாக்கம்

(1) குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் குறைகளை தீர்க்காவிட்டால் கீழ்க்கண்ட உயர் அதிகாரியை அணுகி தங்கள் குறைகளை தெரிவிக்கலாம்

**பொது மேலாளர்,**
**மாவட்டத் தொழில்மையம்,**
**தொழிற்பேட்டை, தட்டாஞ்சாவடி,**
**புதுச்சேரி – 605 009.**
**தொலைபேசி எண்கள்: 0413 – 2248987 , 2248391 , 2249392.**
**மின்னஞ்சல்:dic@py.gov.in**

(2) தங்களுக்கு அளிக்கப்படும் சேவையில் திருப்தி இல்லையெனில் கீழ்க்கண்ட உயர்மட்ட அதிகாரியை அணுகி தங்கள் குறைகளை தெரிவிக்கலாம்.

**இயக்குனர்(தொழில் மற்றும் வணிகத்துறை)**
**தொழிற்பேட்டை, தட்டாஞ்சாவடி,**
**புதுச்சேரி – 605009.**
**தொலைபேசி எண்கள்: 0413 - 2248476;2248168;2248320**
**மின்னஞ்சல்: ind@py.gov.in**

(3) தங்களுக்கு அளிக்கப்படும் சேவையில் திருப்தி இல்லையெனில் கீழ்க்கண்ட உயர்மட்ட அதிகாரியை அணுகி தங்கள் குறைகளை தெரிவிக்கலாம்.

**அரசு செயலர் (தொழில் மற்றும் வணிகம்),**
**தலைமைச் செயலகம்,**
**புதுச்சேரி – 605001**
**தொலைபேசி எண்: 0413 – 2233304**
**மின்னஞ்சல்: secyind.pon@nic.in**

## XV. பங்குதாரர்கள் பட்டியல்

| வ.எண் | பங்குதாரர்கள் |
|---|---|
| 1 | தொழில் முனைவோர் / வேலையில்லா இளைஞர்கள் / கைவினைக் கலைஞர்கள் |
| 2 | சம்பந்தப்பட்ட அனைத்து அரசு துறைகள் |
| 3 | பதிவு செய்யப்பட்ட கைவினைத் தொழிற் சங்கங்கள் / தென்னைநார் தொழில் சங்கங்கள் / விஸ்வகர்மா சங்கங்கள் |

## XVI. பொறுப்பு அலுவலகங்கள் மற்றும் துணை அலுவலகங்களின் முகவரிகள்

| வ.எண் | பொறுப்பு அதிகாரி | அலுவலக முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | அரசு செயலர் (தொழில் மற்றும் வணிகம்) | தலைமைச் செயலகம், புதுச்சேரி – 605 001 | 0413 - 2233304 |
| 2 | இயக்குனர் | தொழில் மற்றும் வணிகத் துறை தொழிற்பேட்டை, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி –605 009 | 0413- 2248476<br>2248320<br>2248168 |
| 3. | பொது மேலாளர் | மாவட்டத் தொழில் மையம், தொழிற்பேட்டை, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி – 605 009 | 0413 - 2248987<br>2248391<br>2249392 |
| 4 | இயக்க மேலாளர் | மாவட்டத் தொழில் மையம், ஊரக தொழிற்பேட்டை, கோட்டுச்சேரி, காரைக்கால்- 609 609 | 04368 - 266467 |
| 5 | தொழில்நுட்ப அதிகாரி | ஏனாம் - 533 464 | 0884 - 2321257 |
| 6 | தொழில்நுட்ப அதிகாரி | மாகி – 673 310 | 0490 - 2333235 |

## XVII. குடிமக்கள் சாசனத்தை மறு ஆய்வு செய்து புதுப்பிக்கப்படும் மாதம் மற்றும் வருடம்

குடிமக்கள் சாசனம் அடுத்ததாக 2025 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் மறு ஆய்வு செய்யப்படும்.

## XVIII. முடிவுரை

அரசு துறைகளின் ஒரு பகுதியாக செயல்திறன், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அமைப்பானது (PMES) துறையின் குடிமக்கள் சாசனத்தை மறு ஆய்வு செய்து தொழில் துறை கொள்கை வரைவு 2016க்கீடாக மாற்றி அமைத்துள்ளது. **சேவைகள் பற்றிய கருத்துக்களை** தொழில்முனைவோர் / வேலையில்லா இளைஞர்கள் / கைவினைக் கலைஞர்களிடமிருந்து பெரிதும் வரவேற்கப்படுகிறது. இதன்மூலம் சேவையின் திறனை அதிகப்படுத்த முடியும் மற்றும் தங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலும்.

**குடிமக்கள் சாசனத்தைப் பற்றிய கருத்துக்களை அனுப்பவேண்டிய முகவரி:**

**பொது மேலாளர்,**
**மாவட்டத் தொழில் மையம்,**
**தொழிற்பேட்டை,**
**தட்டாஞ்சாவடி,**
**புதுச்சேரி – 605 009.**
**இணையதளம் :** http://dic.py.gov.in

## XIX. சுருக்கங்களின் விளக்கம்

| சுருக்கங்கள் | விரிவாக்கம் |
|---|---|
| EDP | Entrepreneurship Development Programme |
| PMEGP | Prime Minister's Employment Generation Programme |
| MUPSES | Motivation of Unemployed Persons to start Self-Employed Enterprises Scheme |
| DA | Daily Allowance |
| TA | Travelling Allowance |
| CSS | Central Sector Scheme |
| SME | Small & Medium Enterprise |
| PMPC | Puducherry Management Productivity Council |
| CII | Confederation of Indian Industry |
| G.I.A | Grant-in-Aid |
| PKVIB | Puducherry Khadi and Village Industries Board |
| KVIC | Khadi and Village Industries Commission |
| CFC | Common Facility Centre |
| DDC | Design Development Centre |
| SFURTI | Scheme of Fund for Regeneration of Traditional Industries |
| MUDRA | Micro Units Development and Refinance Agency Ltd. |
| PM SVANidhi | Prime Minister Street Vendor's AtmaNirbhar Nidhi |
| MSME | Micro Small and Medium Enterprises |
| MSDE | Ministry for Skill Development and Enterpreneurship |

## XX. குடிமக்கள் சாசனத்தை மறு ஆய்வு செய்யும் பணிக்குழு

1. பொது மேலாளர் - தலைவர்
2. இயக்க மேலாளர் - உறுப்பினர்
3. துணை இயக்க மேலாளர் - செயல் உறுப்பினர்
4. தொழில்நுட்ப அதிகாரி - உறுப்பினர்

## தொடர்புடைய அதிகாரிகள்

திருவாளர்கள்:

| | |
|---|---|
| **K.** கோவிந்தராஜன் | பொது மேலாளர் |
| **G.** ஜெயராமன் | இயக்க மேலாளர் |
| **G.** ஹேமலதா | துணை இயக்க மேலாளர் |
| **S.** செந்தில் குமார் | தொழில்நுட்ப அதிகாரி |
| **J.** தமிழன்பன் | தொழில்நுட்ப அதிகாரி |

# மாவட்டத் தொழில் மையம்
# நிர்வாக அமைப்பு விளக்கப்படம்

**அரசு செயலர்**
**தொழில் மற்றும் வணிகம்**
**தலைமைச் செயலகம்**

↓

**பொது மேலாளர்**
**துறை தலைவர்**

↓

## புதுச்சேரி

| இயக்க மேலாளர் (அலுவலக தலைவர்) (பொது தகவல் அதிகாரி) | திட்ட மேலாளர் (குடிசைத் தொழில் பிரிவு) | துணை இயக்க மேலாளர் (பொருளாதார ஆய்வு பிரிவு) | துணை இயக்க மேலாளர் (மூலப்பொருள் பிரிவு) | இளநிலை கணக்கு அதிகாரி (பணம் மற்றும் பரிவர்த்தனை அதிகாரி) |
|---|---|---|---|---|
| **கட்டுப்படுத்தும் அதிகாரி**<br>• பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஒருங்கிணைப்பு<br>• வேலையில்லா நபர்கள் சுயதொழில் தொடங்க ஊக்குவிக்கும் திட்டம் 2006<br>• பிரதம மந்திரியின் விஸ்வகர்மா திட்டம்<br><br>**துணை இயக்க மேலாளர் (கடன் பிரிவு) (மக்கள் தொடர்பு அதிகாரி)**<br><br>**இயக்கும் அதிகாரி**<br>• பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஒருங்கிணைப்பு<br>• வேலையில்லா நபர்கள் சுயதொழில் தொடங்க ஊக்குவிக்கும் திட்டம் 2006<br>• பிரதம மந்திரியின் விஸ்வகர்மா திட்டம்<br><br>**தொழில்நுட்ப அதிகாரிகள்-3**<br>• பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஒருங்கிணைப்பு<br>• வேலையில்லா நபர்கள் சுயதொழில் தொடங்க ஊக்குவிக்கும் திட்டம் 2006<br>• பிரதம மந்திரியின் விஸ்வகர்மா திட்டம் | • **கைவினை தொழில்**<br>• **தென்னை நார் தொழில்**<br><br>**தொழில்நுட்ப அதிகாரிகள்-2**<br><br>**கைவினைத் தொழில் வளர்ச்சி**<br>• பயிற்சி<br>• கண்காட்சி<br>• முதியோர் ஓய்வூதியம்<br><br>**தென்னை நார் தொழில் வளர்ச்சி**<br>• தென்னை நார் பயிற்சி<br>• தென்னை -நார் சங்கம் | • தொழிற்கூடப் பயிற்சி<br>• உயர்திறன்/ மேம்பட்டப் பயிற்சி<br>• தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்<br><br>**தொழில்நுட்ப அதிகாரி**<br>• தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம<br>• தொழிற்கூட பயிற்சி<br>• உயர்திறன் / மேம்பட்டப் பயிற்சி | **(துணை பொது தகவல் அதிகாரி)**<br>• விற்பனை மற்றும் விளம்பரம்<br>• கண்காட்சி<br><br>**தொழில்நுட்ப அதிகாரி**<br>• விற்பனை மற்றும் விளம்பரம்<br>• கண்காட்சி | **கண்காணிப்பாளர் (கணக்கு பிரிவு)**<br>• பட்ஜெட்<br>• ஊதியப் பட்டி<br>• வருமான வரி<br>• ஜீ.பீ.எப் அனுமதி<br>• ரொக்கப் புத்தகம் பராமரித்தல்<br><br>**கண்காணிப்பாளர் (நிர்வாகப் பிரிவு)**<br>• சேவை புத்தகங்களை பராமரித்தல்<br>• ஊதிய உயர்வு/எம்ஏசிபி<br>• தகவல் அறியும் உரிமை சட்டம்<br>• தணிக்கை பத்தி<br>• பாராளுமன்ற கேள்விகள்<br>• கதர் மற்றும் கிராம தொழில் வாரியம் |

## காரைக்கால்

**இயக்க மேலாளர்**
(அலுவலகத் தலைவர்)

(அனைத்துப் பணிகளும்)

**துணை இயக்க மேலாளர்**

(அனைத்துப் பணிகளும்)

**தொழில்நுட்ப அதிகாரி**

(அனைத்துப் பணிகளும்)

## மாஹே

**தொழில்நுட்ப அதிகாரி**

(அனைத்துப் பணிகளும்)

## ஏனாம்

**தொழில்நுட்ப அதிகாரி**

(அனைத்துப் பணிகளும்)